பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**10 06 2026 WEDNESDAY 6.30 PM**

<u>மாநிலச்செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களின் அசைக்கமுடியாத நம்பிக்கையை பெற்ற தலைவராக திகழ்வதாக மத்திய அமைச்சரவை கூட்டத்தில் பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் வழங்கும் சேவையிலிருந்து, மூன்று செய்தி தொலைக்காட்சிகளின் ஒளிபரப்பு நிறுத்தப்பட்டிருப்பது கடும் கண்டனத்திற்குரியது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

3. தொழில்நுட்ப கோளாறு காரணமாகத்தான் மூன்று செய்தி தொலைக்காட்சிகளின் ஒளிபரப்பு நிறுத்தப்பட்டதாக மாநில அமைச்சர் திரு ராஜ்மோகன் விளக்கம் அளித்துள்ளார்.

4. தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரண்டு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. உலகக்கோப்பை வில்வித்தை போட்டியில் இந்தியாவின் **Parneet Kaur** மற்றும் **Kushal Dalal** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

. . . இனி விரிவான செய்திகள் . . .

<<<<<<<>>>>>>>

நீண்டகாலம் தொடர்ச்சியாக பணியாற்றிவரும் பிரதமர் என்ற சாதனையை படைத்துள்ள திரு நரேந்திர மோடிக்கு பாராட்டு தெரிவித்து மத்திய அமைச்சரவை கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இன்று புதுதில்லியில் அமைச்சரவைக்கூட்டம் தொடங்கியதும், பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு அமைச்சர்கள் அனைவரும் எழுந்துநின்று கரகோஷம் எழுப்பி வாழ்த்துகளை தெரிவித்தனர்.

*(Sound Byte — கரகோஷம் - 11 Sec. )*

இதனைத்தொடர்ந்து பிரதமருக்கு பாராட்டு தெரிவிக்கும் தீர்மானத்தை மத்திய அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் முன்மொழிந்தார்.

திரு நரேந்திர மோடி 4 ஆயிரத்து 399 நாட்கள் பிரதமராக தொடர்ச்சியதாக பணியாற்றியதன் காரணமாக, இந்நாள் நமது ஜனநாயக வரலாற்றில் முக்கியமான மைல் கல்லாகும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது

இதற்கு முன்னர் 1952-ஆம் ஆண்டுமுதல், 1964-ஆம் ஆண்டு வரை பிரதமராக ஜவஹர்லால் நேரு 4 ஆயிரத்து 398 நாட்கள் பணியாற்றியதுதான் சாதனையாக இருந்ததாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டு நலனுக்கே முக்கியத்துவம் என்ற அடிப்படையில் செயல்பட்டு வருவதன் காரணமாக திரு நரேந்திர மோடி மக்களின் அசைக்கமுடியாத நம்பிக்கையை பெற்றுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதமராக திரு நரேந்திர மோடி பதவியேற்றதுமுதல் மக்கள் நலனுக்காக நிறைவேற்றப்பட்ட திட்டங்களையும் பட்டியலிட்டு அந்த தீர்மானத்தில் பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு நரேந்திர மோடியின் தலைமையின்கீழ், இந்தியாவின் வளர்ச்சி புதிய சாதனைகளை படைக்கும் என்றும், அடுத்த 21 ஆண்டுகளுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கு எட்டப்படும் என்று முழுமையாக நம்புவதாகவும் அந்த தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, நாட்டின் வளர்ச்சிக்காக பிரதமர் ஆற்றிய பங்களிப்பு மகத்தானது என்றும், அதனை மத்திய அமைச்சரவை இன்று கொண்டாடியுள்ளதாகவும் மூத்த பத்திரிகையாளர் திரு வெங்கடேஷ் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***(Sound Byte — வெங்கடேஷ் - 72 Sec. )***

<<<<<<<>>>>>>

தமிழக முதலமைச்சர் திரு விஜய், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வை இன்று புதுதில்லியில் சந்தித்து பேசினார்.

மரியாதை நிமித்தமாக இந்த சந்திப்பு நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனைத்தொடர்ந்து, குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணனையும் திரு விஜய் சந்தித்து பேசினார்.

பின்னர், காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் திருமதி சோனியாகாந்தி, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி ஆகியோரையும் முதலமைச்சர் சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

நித்தி ஆயோக் ஆட்சிமன்ற குழுக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக முதலமைச்சர் தில்லி சென்றுள்ளார்.

இக்கூட்டம் நாளை நடைபெறவுள்ளது.

<<<<<<<>>>>>>

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் வழங்கும் ஒளிபரப்பு சேவையிலிருந்து, மூன்று செய்தி தொலைக்காட்சிகளின் ஒளிபரப்பு நிறுத்தப்பட்டிருப்பது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மின்வெட்டினால் பொதுமக்கள்படும் அவதி, தொடரும் பாலியல் வன்கொடுமைகள், சட்டம் - ஒழுங்கு சீர்கேடு உள்ளிட்ட செய்திகளை ஒளிபரப்பியதால் தவெக அரசு இந்த மூன்று சேனல்களை முடக்கியுள்ளதாக குறை கூறியுள்ளார்.

ஜனநாயகத்தின் நான்காவது தூணான ஊடகங்கள்தான் அரசின் தவறுகளை சுட்டிக்காட்டுவதிலும், மக்களின் அன்றாட பிரச்சினைகளை அரசுக்கு எடுத்து சொல்வதிலும் முக்கிய பங்கு வகிப்பதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகங்களின் குரல்வளையை நெரிப்பதன்மூலம் ஆட்சியின் அவலங்கள் மக்களிடம் சென்றடையாமல் தடுத்திட முடியும் என்று தவெக அரசு எண்ணுவதாகவும் அவர் கூறியுள்ளர்.

தவெக அரசின் இந்த நடவடிக்கை பத்திரிகை சுதந்திரத்திற்கு எதிரானது என்றும் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>>

ஊடகங்களின் குரல்வளையை நெரிக்கும் வகையில் தவெக அரசு செயல்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் திரு உதயநிதி ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தவெக அரசுக்கு எதிரான செய்திகளை ஒளிபரப்பியதற்காக மூன்று செய்தி சேனல்கள் அரசு கேபிளிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

இந்த நடவடிக்கை வன்மையாக கண்டிக்கத்தக்கது என்றும், அந்த சேனல்களின் ஒளிபரப்பு தொடர தவெக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளர்.

அஇஅதிமுக-வும் தவெக அரசின் இந்த நடவடிக்கைக்கு கண்டனம் தெரிவித்துள்ளது.

மூன்று செய்தி சேனல்கள் அரசு கேபிளில் முடக்கப்பட்டதற்கு தொழில்நுட்ப கோளாறுதான் காரணம் என்று கூறுவது ஏற்க முடியாது என்று அக்கட்சி வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, தொழில்நுட்ப கோளாறு காரணமாகத்தான் மூன்று செய்தி தொலைக்காட்சிகளின் ஒளிபரப்பு நிறுத்தப்பட்டதாக மாநில அமைச்சர் திரு ராஜ்மோகன் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — ராஜ்மோகன் — 45 Sec. )***

<<<<<<<>>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரண்டு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை — 36 Sec. )***

<<<<<<<>>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் மாநில அமைச்சர் திரு வெங்கடரமணன் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

------------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள பள்ளி வாசல்களில் பணியாற்றும் உலமாக்களுக்கு மானிய உதவியுடன் இருசக்கர வாகனம் வாங்க விரும்புவோர் உரிய ஆவணங்களுடன் சிறுபான்மையினர் அலுவலங்களில் வரும் 30-ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு ஆட்சியர் திருமதி சினேகா கேட்டுக்கொண்டுள்ளார்.

------------------

தென்மண்டல காவல்துறை தலைவர் திரு விஜயேந்திர பிடாரி தலைமையில் உயரதிகாரிகள் பங்கேற்ற ஆலோசனைக்கூட்டம் இன்று திருநெல்வேலியில் நடைபெற்றது.

------------------

விழுப்புரம் அருகே நேரிட்ட சாலை விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

<<<<<<<>>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

உலகக்கோப்பை வில்வித்தை போட்டியில் இந்தியாவின் **Parneet Kaur** மற்றும் **Kushal Dalal** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

துருக்கியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் **Parneet Kaur 143-142** என்ற புள்ளிக்கணக்கில் அமெரிக்காவின் **Sydney Sullenverger-**ஐ வென்றார்.

**Kushal Dalal** இரண்டாவது சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் ரிஷப் யாதவை வென்றார்.

----------------

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் இந்தியாவின் ஹர்திக் பாண்டியா காயம் காரணமாக பங்கேற்க மாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

----------------

**Zagreb** சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மணிக்கா பத்ரா - மானவ் தாக்கர் இணை பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

தகுதி சுற்று ஆட்டத்தில் இந்த இணை, போலந்தின் **Marek Badowski — Zuzanna Wielgos** இணையை வென்றது.

**<<<<<<<END>>>>>>>**